# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

---

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2003, மாச்சு மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**2003 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

*[2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ— ஓ. 53/2002*
*4716*

**1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

*1971 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கச் சட்டத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தியெட்டாம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(அ) அத்தகைய தொழில்தருநரினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அத்தகைய விண்ணப்பத்தின் பிரதியொன்று சம்பந்தப்பட்ட வேலையாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டு கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை

வேலையாளுக்கு அளித்த பின்னர் அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம் ;":

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2அ) இரண்டாம் உட்பிரிவின்கீழான விண்ணப்ப மொன்று பெறப்படுவதன்மேல், ஆணையாளர், அத்தகைய விண்ணப்பம் ஆணையாளரினால் பெறப்படுவதிலிருந்து மூன்று நாட்களினுள், சம்பந்தப்பட்ட வேலையாளரினால் அத்தகைய விண்ணப்பம் பெறப்படுவதிலிருந்து ஏழு நாட்களினுள் அதற்கான அவரது மறுமொழிகளைச் சமர்ப்பிக்கும்படி அத்தகைய வேலையாளரைக் கோருதல் அவரது கடமையாதல் வேண்டும்.":

ஆயின் எவ்வாறாயினும், வேலையாள் மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்குள் மறுமொழியை அளிக்கத் தவறுமிடத்து, அத்தகைய தவறுகைக்கு அத்தகைய வேலையாளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளே காரணமாகும் என ஆணையாளர் திருப்திப்படுத்துவதன்மீது, அவர் ஏழு நாட்களை விஞ்சாத மேலுமொரு காலப்பகுதியை வழங்கலாம்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "முடிவுறுத்தலிலிருந்து ஆறு மாதங்களுக்குள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "முடிவுறுத்துதலிலிருந்து மூன்று மாதங்களுக்குள்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6இ, 6ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றன என்பதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 6இ, 6ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"6ஆம் பிரிவின்கீழ் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையின்மீது பணஞ் செலுத்தப்படாதுள்ளவிடத்து, நீதிவான் கட்டளை ஆக்குதல்.

6இ. இச்சட்டத்தின் 6ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 6அ என்னும் பிரிவின்கீழ் வேலையாளொருவருக்கு ஏதேனும் பணத் தொகையைச் செலுத்தும்படி ஆணையாளர் கட்டளையிடுமிடத்து, அத்தகைய வேலையாள் அவரது தொழில்தருநரினால் எந்த இடப்பரப்பில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அல்லது தொழிலுக்கமர்ப்பட்டிருந்தாரோ அந்த இடப்பரப்பில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றம், ஆணையாளினால் அதற்கெனக் குறித்துரைக்கப்படும் காலத்தினுள் அத்தகைய பணம் கொடுப்பனவு செய்யப்படவில்லையென அத்தகைய வேலையாளரின் எழுத்திலான மனுவின்மீது திருப்திப்பட்டால், அத்தகைய பணத்தொகை அத்தகைய தொழில்தருநரினால் அத்தகைய வேலையாளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்றும், அத்த கைய தொகையானது கட்டளைக்கு இணங்கியொழுகச் செலுத்தப்படாவிடின், நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் குற்றப் பணமொன்று என்றாற்போன்று அதேமுறையில் அறவிடப்படுமென்றும் கட்டளை ஆக்கலாம்; அத்துடன் அவ்வாறு அறவிடப்படும் தொகை அத்தகைய வேலையாளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நட்டஈட்டைக் கணிப்பீடு செய்தல்.

6ஈ. இச்சட்டத்தின்கீழ் ஆணையாளரினால் செய்யப்படும் ஒரு முடிபின்மீது அல்லது ஆக்கப்படும் ஒரு கட்டளையின்மீது ஒரு வேலையாளுக்கு நட்டஈடாகச் செலுத்தப்படவுள்ள ஏதேனும் பணத்தொகை, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் ஆணையாளரால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய வாய்ப்பாட்டுக்கிணங்கக் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "6 ஆம் பிரிவின்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "6ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "6 ஆம் பிரிவின்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "6ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.